Arimā Nōkku

# அரிமா நோக்கு

6:1 ஏப்பிரல் 2012

ரூ.30

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

அரிமா நோக்கு
6:1 ஏப்பிரல் 2012

தாகூர் 150
- *வ. ஜெயதேவன்* 03

தமிழகத் தாவரப் பெயர்களின் சீரமைப்பு - ஓர் அறிவியல் கண்ணோட்டம்
- *ச. சண்முகசுந்தரம்* 05

சொல்வகைகள்
- *ஏ. ஆதித்தன்* 11

Morphological Processing in Reading Tamil and English by Dyslexic Children
- *P. Revathi & R. Lalitha Raja* 19

பழந்தமிழர் நிகழ்த்தல் மரபுகளும் அவற்றின் தொடர்ச்சியும்...
- *கோ. பழனி* 24

அகப்பாடல்களில் அறிவியல்
- *நெல்லை சு. முத்து* 33

தமிழிலக்கியங்களும் தாவரப் பெயரீட்டு முறையும்
- *இரா. பஞ்சவர்ணம்* 43

திருப்பாவில் பரிபூரணானந்தம்
- *ச. வனிதா* 48

Affixation in Tamil and English: A Linguistic Approach 51
- *Mummoorthy, K. & Saranya, R.*

யாதொன்றும் பேணாமை
- *டாக்டர் ராம்* 57

காலமும் கால வரிசையும்
- *சா. கந்தசாமி* 63

மேரி டாலி (1928-2010)
- *இரா. பிரேமா* 67

*மற்றும்*
*நூல், ஆய்வாளர் அறிமுகம், கவிதைகள், துணுக்குகள்*

# தலைவாயில்

**ஈரோடு தமிழன்பன்**

## கொலை வெறியும் கல்வி முறையும்

போதுமான கவனம் படிப்பில் இல்லை என்று வகுப்பு ஆசிரியர் தேர்வு மதிப்பெண் பற்றி எழுதிய குறிப்பால், ஆத்திரம் அடைந்த ஒன்பதாம் வகுப்பு மாணவன், அப்படி எழுதிய ஆசிரியரை வகுப்பறையிலேயே கத்தியால் குத்திக் கொலை செய்கிறான்;

தேர்வுக்கூடத்தில் பக்கத்தில் இருப்பவரை அல்லது தன்வயம் மறைத்துவைத்திருக்கும் துண்டுச் சீட்டுகளைப் பார்த்து எழுதுவதைத் தடுத்த தேர்வுக்கூட மேற்பார்வையாளர், தெருவில் மாணவர்களாலேயே வண்டியேற்றிக் கொல்லப்படுகிறார்.

தேர்வில் உயர்ந்த மதிப்பெண் பெறமுடியாது, பெறாமல்போனால் ஏற்படும் அவமானம், காத்திருக்கும் தண்டனை ஆகியவற்றை எண்ணிக் குழம்பித் தவித்துத் தற்கொலை செய்துகொள்ளும் மாணவன்.

விளிம்புநிலைக் குடும்பத்தில் பிறந்து நிறைவேற வாய்ப்பில்லாத கல்விக் காதல் கனிந்தநிலையில் சில நல் உள்ளங்கள் நல்கிய ஆதரவால் மேல்நிலைப் பள்ளிவரை படித்துப் பன்னிரண்டாம் வகுப்பில் பள்ளியில் முதலிடமும் மாநில அளவில் உயர் எல்லையையும் தொட்ட மாணவன், பொறியியல் கல்லூரியிலும் இடம்பெற்றுக் கல்லூரிக் கவிஞனாகச் சுடர்விட்டுக் கவிதை வெளியீட்டு ஏற்பாடும் செய்துவிட்ட தருணத்தில், முடிக்கப்படாமல் விட்டுவைத்திருக்கும் பருவத் தேர்வுகளின் எண்ணிக்கையை எண்ணிக் கலங்கி விடுதி அறையிலேயே தற்கொலை செய்துகொள்கிறான். இப்படி எத்தனையோ நிகழ்வுகள் இந்த நாட்டில் ஒவ்வோர் ஆண்டும், ஒவ்வோர் ஊரிலும்.

அரசு, சமுதாயம், கல்வியாளர்கள் என்றும், குடும்பம் உறவு நண்பர்கள் என்றும் எவரும் எதுவும் ஏன் தீர்வு காணமுடியாதபடி இத்துயரச் சம்பவங்கள் தொடர்கதைகளாகின்றன?

அறிவு, திறமை, ஆற்றல், ஆளுமை, அகப்பண்பாட்டு மலர்ச்சி என்ற பரிமாணங்கள் கைவிடப்பட்டு, தேர்வு, போட்டி, மதிப்பெண்கள், வெற்றி தோல்வி, பணம்கொட்டும் உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் என்கிற கனவு வற்புறுத்தல்கள், நனவுக் கொடும்பாடுகள் இளைய சமுதாயத்தைச் சீரழித்துச் சிதைத்துக்கொண்டு போவதை இன்னும் எவ்வளவு காலம் பார்த்துக்கொண்டிருப்பது?

தனது வாழ்க்கையைக் கண்டெடுத்துத் தனக்கும் பிறருக்குமாக அதைப் பகிர்வுசெய்து நிறைவுகாணும் மானுட அறத்திற்கு மாறாக, மற்றவர் தோல்வியின் மீது தனது வாழ்வையும் வருங்காலத்தையும் நிறுவ எத்தனிக்கும் மானுடச்சிறுமையை வளர்த்தெடுக்கும் கல்விக் குற்றம் அழியப்போகும் சமூகத்தின் அடையாளமேயன்றி வேறு என்ன?

மாணவர்களைத் தேர்வுகள் என்னும் அதிரடித் தாக்குதல்களிலிருந்து காப்பாற்ற வேண்டாமா? உண்மையில் இந்த நாட்டில் மாணவர்களை இடர்ப்படுத்தும், தம் காலடியே அவர்களைப்போட்டு மிதித்து நசுக்கும் வன்முறைச் சம்பவங்கள் வேறு எதுவும் உண்டோ?

எதிர்காலத்தில் இந்த நாட்டை உயர்த்தித் தம்மையும் உயர்த்துவார்கள் என்கிற எதிர்பார்ப்புக்கும் நம்பிக்கைக்கும் உரிய இளைய தலைமுறையைக் கொலைவெறியர்களாய், தற்கொலைத் தத்துவப் பிம்பங்களாய் வனைந்து கொடுக்கும் இடங்கள் புனைந்துகொண்ட பெயர்களா பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள்?

♦


*ஆசிரியர்*
ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*
*(மதிப்புறு நிலை)*
வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*
சிலம்பொலி சு. செல்லப்பன்
கா. செல்லப்பன்
இரா. இளவரசு
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
நா. முத்துக்குமார்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்

*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல்
நாடுகளிலும் உள்ள தமிழியல்
அறிஞர்கள், பல்கலைக்கழகப்
பேராசிரியர்கள்
மற்றும்
படைப்பாளிகள்

*பதிப்பாளர்*
இரா. பன்னிருகைவடிவேலன்


# கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 2000/- | US $ 150 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/- | US $ 250 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 10,000/- | US $ 500 |

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் உண்டு.
- புரவலர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 40% சிறப்புக் கழிவும் உண்டு.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் உண்டு.

**விளம்பரக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| பின்னட்டை | (பல வண்ணங்கள்) | ரூ. 15,000 |
| உள்ளட்டை | (பல வண்ணங்கள்) | ரூ. 10,000 |
| முழுப்பக்கம் | (கருமை & வெண்மை) | ரூ. 3,000 |
| அரைப்பக்கம் | (கருமை & வெண்மை) | ரூ. 1,500 |

தொடர்ந்து ஓராண்டுக்கு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கு 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.

கட்டணம் செலுத்த:

**DD in favour of '*Nokku*' payable at Chennai.**
**Indian Overseas Bank (IFSC Code: IOBA0001681):**
**S. B. A/c No. 16810100006423**


அரிமா நோக்கு
# 259, 4/1083 நேரு நகர், 2-ஆவது முதன்மைச் சாலை
கொட்டிவாக்கம், சென்னை 600 096
வலைத்தளம்: www. arimaanokku.com
மின் அஞ்சல்: arimaanokku@hotmail.com
செல்: 9380626448